**நெல்லியாளம் நகர்மன்றத்தின் அவசர கூட்டம் 03.02.2023 ஆம் தேதி காலை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இந்நகராட்சியின் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளின் விவரம்**

**நகர்மன்ற தலைவர்,**
**நெல்லியாளம் நகராட்சி**

**பொருள் எண்.1**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பால்மேடு குடிநீர் கிணறு அருகில் தடுப்பணை மற்றும் குழாய் அமைத்தல் 10.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.ரஹமத்துல்லா, ஒப்பந்ததாரர் | 2.05% குறைவு |

**அலுவலக குறிப்பு**

இப்பணிக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது. வழிகாட்டு நெறிமுறைக்கிணங்க ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டமையால் மறு டெண்டர் கோரலாம்

**தீர்மானம் எண். 60 /2023, நாள்.03.02.2023 / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**பொருள் எண்.2**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் மோட்டார்களுக்கு 6 மாத பராமரிப்பு செய்தல் 9.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் | 0.11% குறைவு |

**அலுவலக குறிப்பு**

இப்பணிக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டுள்ளது. வழிகாட்டு நெறிமுறைக்கிணங்க ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டமையால் மறு டெண்டர் கோரலாம்

**தீர்மானம் எண். 61 /2023, நாள்.03.02.2023 / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்**

**பொருள் எண்.3**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா மற்றும் நாடுகாணி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தடுப்பணை சுத்தம் செய்தல் 4.90 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.பாத்திமாபீவி, ஒப்பந்ததாரர் | 46.09% குறைவு |
| 2 | திருமதி.பார்வதி, ஒப்பந்ததாரர் | 44.25% குறைவு |
| 3 | திரு.சசிகுமார், ஒப்பந்ததாரர் | 16.30% குறைவு |
| 4 | திரு. மகேந்திரன், ஒப்பந்ததாரர் | 16.02% குறைவு |
| 5 | திரு.நவரத்தினம், ஒப்பந்ததாரர் | 477.60% அதிகம் |
| 6 | திரு.லோகநாதன், ஒப்பந்ததாரர் | 13.39% அதிகம் |
| 7 | திரு.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் | 19.20% குறைவு |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற ஏழு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக 25% மேலாக குறைத்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. குறைவான மதிப்பீட்டில் செய்யப்படும் பணியில் மக்களுக்கு திருப்திகரமாக அமையாது, தரம் குறைந்த பணியாக இருக்கும் என்ற காரணத்தினால் ஒப்பந்ததாரர் பாத்திமாபீவி மற்றும் பார்வதி ஆகியவர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்க இயலாது.

ஒப்பந்ததாரர் திரு.மாரிமுத்து அனைத்து ஒப்பந்த நிபந்தனைகள் நிறைவு செய்துள்ள

நிலையில் மதிப்பீட்டினைவிட அடுத்த நிலையில் 19.20% கொடுத்துள்ளவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண். 62 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஏற்கப்படுகிறது.</u>**

**<u>பொருள் எண்.4</u>**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் குன்றில்கடவு எஸ்.டி காலனி சாலையில் இண்டர்லாக் பேவர் பிளாக் மூலம் அமைத்தல் (வார்டு எண்.3 ) 9.90 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.அசிஸ், ஒப்பந்ததாரர் | 17.82% குறைவு |
| 2 | திரு.P.யாக்கோப், ஒப்பந்ததாரர் | 8.59% குறைவு |
| 3 | திரு.P.ரஹீம், ஒப்பந்ததாரர் | 25.66% குறைவு |
| 4 | திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரர் | 24089.16% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக 25% மேலாக குறைத்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. குறைவான மதிப்பீட்டில் செய்யப்படும் பணியில் மக்களுக்கு திருப்திகரமாக அமையாது, தரம் குறைந்த பணியாக இருக்கும் என்ற காரணத்தினால் ஒப்பந்ததாரர் ரஹீம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க இயலாது.

ஒப்பந்ததாரர் திரு.அசிஸ் அனைத்து ஒப்பந்த நிபந்தனைகள் நிறைவு செய்துள்ள நிலையில் மதிப்பீட்டினைவிட அடுத்த நிலையில் 17.82% கொடுத்துள்ளவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண். 63 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

**<u>பொருள் எண்.5</u>**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் குன்றில்கடவு பள்ளி அருகில் இண்டாலர்க் பேவர் பிளாக் மூலம் சாலை அமைத்தல் (வார்டு எண்.3 ) 7.10 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.P.P.யாக்கோப், ஒப்பந்ததாரர் | 8.59% குறைவு |
| 2 | திரு.P.நௌசாத், ஒப்பந்ததாரர் | 25.66% குறைவு |
| 3 | திரு.ரஹமத்துல்லா, ஒப்பந்ததாரர் | 19.16% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u>**

வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக 25% மேலாக குறைத்து ஒப்பந்தப்புள்ளி திரு.நௌசாத்திடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி மக்களுக்கு திருப்திகரமாக அமையாது தரம் குறைந்த பணியாக இருக்கும் என்ற காரணத்தினாலும், தனியர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி குறைவான மதிப்பீட்டில் செய்யப்படும் பணியில் மக்களுக்கு திருப்திகரமாக அமையாது, தரம் குறைந்த பணியாக இருக்கும் என்ற காரணத்தினால் தனியர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யத நிலையில் ஏற்க இயலாது.

ஒப்பந்ததாரர் திரு.ரஹமத்துல்லா மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள நிலையிலும், மதிப்பீட்டை விட அடுத்தாக குறைவாக கொடுத்துள்ள (19.16%) ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண். 64 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

<u>பொருள் எண்.6</u>

**2022–2023ம்** ஆண்டு பொதுநிதியின் கீழ் கூமூலா எஸ்.சி காலனியில் இண்டர்லாக் பேவர் பிளாக் மூலம் சாலை அமைத்தல் (வார்டு எண். 18 ) 10.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.P.ராஜா, ஒப்பந்ததாரர் | 10.56% குறைவு |
| 2 | திரு,பழனிவேல், ஒப்பந்ததாரர் | 20.33% குறைவு |
| 3 | திரு.நசுருதீன், ஒப்பந்ததாரர் | 13.89% குறைவு |
| 4 | திரு.P.ரஷீத், ஒப்பந்ததாரர் | 25.67% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக 25% மேலாக குறைத்து ஒப்பந்தப்புள்ளி திரு.ரஷீத் இடம் இருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை பூர்த்தி செய்யாத நிலையில் தனியரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க இயலாது.

ஒப்பந்ததாரர் திரு.பழனிவேல் மதிப்பீட்டினை விட 20.33% குறைவாக கொடுத்துள்ள நிலையில் அனைத்து ஒப்பந்த நிபந்தனைகளும் பூர்த்தி செய்துள்ள நிலையில் அதனை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண். 65 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

<u>பொருள் எண்.7</u>

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் அத்திமாநகரில் கழிப்பிடத்திற்கு மேற்கூரை அமைத்தல் 2.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.மூர்த்தி, ஒப்பந்ததாரர் | 18.71% குறைவு |
| 2 | திரு.சசிக்குமார், ஒப்பந்ததாரர் | 21.46% குறைவு |
| 3 | திரு.ராஜா, ஒப்பந்ததாரர் | 34.47% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவாக 25% மேலாக குறைத்து வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் செய்யப்படும் பணிகள் மக்களுக்கு திருப்திகரமாக அமையாது என்ற காரணத்தினால் திரு.ராஜா மற்றும் திரு.பாபுராஜ் பணிகள் ஏற்க இயலாது.

ஒப்பந்ததாரர் திரு.சசிக்குமார் அடுத்த நிலையில் 21.46% குறைவு மதிப்பீட்டினை ஏற்று அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண். 66 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

**<u>பொருள் எண்.8</u>**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் மற்றும் உப்பட்டி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தடுப்பணை சுத்தம் செய்தல் 5.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் | 18.71% குறைவு |
| 2 | திரு.சிவராஜ், ஒப்பந்ததாரர் | 25.30% குறைவு |
| 3 | திரு.ராமானுஜம், ஒப்பந்ததாரர் | 18.02% குறைவு |
| 4 | திரு. சதீஸ்குமார், ஒப்பந்ததாரர் | 14.99% குறைவு |
| 5 | திருமதி.பாத்திமா பீவி, ஒப்பந்ததாரர் | 38.64% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u>**

வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவாக 25% சதவிகிதத்திற்கு மேலாக குறைந்து திருமதி.பாத்திமாபீவி மற்றும் திரு.சிவராஜ் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மக்களுக்கு திருப்திகரமாக, தரமாக பணிகள் மேற்கொள்ள இயலாது என்ற காரணத்தினால் ஏற்க இயலாது.

அடுத்த நிலையில் உள்ள ஒப்பந்ததாரர் திரு.மாரிமுத்து 18.71% குறைவாக அளித்து அனைத்து ஒப்பந்த நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார். இவ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் எண். 67 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

**<u>பொருள் எண்.9</u>**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் புஞ்சவயல் பகுதியில சிமெண்ட் சாலை அமைத்தல் (வார்டு எண். 1 ) 8.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.ரஹமத்துல்லா, ஒப்பந்ததாரர் | 14.34% குறைவு |
| 2 | திரு.பிஜீ, ஒப்பந்ததாரர் | 16.63% குறைவு |
| 3 | திருமதி.ஜெயலட்சுமி, ஒப்பந்ததாரர் | 8.32% குறைவு |
| 4 | திரு.நசுருதின், ஒப்பந்ததாரர் | 17.96% குறைவு |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) திரு.நசுரூதின் 17.96% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிலையில், தனியார் நடுவர் மன்ற நீதிமன்ற அறிவுரைப்படி அன்னாரின் ஒப்பந்த பதிவு தவறு என்று சுட்டிகாட்டியுள்ளது நீதிமன்றம், அதுகுறித்து நகராட்சி ஆணையர் மீதும் குற்றச்சாட்டு நடவடிக்கை தொரடப்பட்டுள்ள நிலையில் தனியர் ஒப்பந்ததாரரா அல்லது ஒப்பந்ததாரர் அல்லாதவரா என்று முடிவு செய்யாத நிலையில் இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க இயலாது என்று சொல்வதற்கு இடமில்லை.

2) அடுத்த நிலையில் உள்ள திரு.பிஜீ மதிப்பிட்டினை விட குறைவாக வழங்கியுள்ள்ளார். இப்பணி உடனடியாக அத்தியா அவசியமாக செய்ய முடிவு செய்தால் திரு.பிஜீ அவாகளின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் முடிவு செய்யலாம்.

3) திரு.நசுருதீன் ஒப்பந்தப்புள்ளி புதுப்பித்தல் 31.01.2023–ல் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளதால், தனியருக்கு புதியதாக பதிவதற்கு கால அவகாசம் கொடுக்கவில்லை என்று நீதிமன்றத்தினை அணுகுவதற்கும் பணியினை முடக்குவதற்க்கும் வாய்ப்பு உள்ள நியில் ரத்து செய்து புதிதாக டெண்டர் விடலாம் என்பதற்கான விளக்கம் வேண்டி வழக்கறிஞர் குறிப்பு தேவைப்படுகிறது. அதுவரை இக்கோப்பினை நிலுவையில் வைக்கலாம்.

மன்றம் 1, 2 மற்றும் 3 மீது ஆய்வு செய்து முடிவு எடுக்கலாம்.

**<u>தீர்மானம் எண். 68 /2023, நாள்.03.02.2023 / 2வது அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி அளிக்கிறது.</u>**

**பொருள் எண்.10**

2022–2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நெல்லியாளம் பேக்டரி சாலை அருகில் இண்டர்லாக் பேவர் பிளாக் அமைத்தல் (வார்டு எண்.3 ) 5.00 இலட்சத்திற்கு 12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.அபுதாஹிர், ஒப்பந்ததாரர் | 18.47% குறைவு |
| 2 | திரு.தமிழ்செல்வன், ஒப்பந்ததாரர் | 16.73% குறைவு |
| 3 | திரு. ராமானுஜம், ஒப்பந்ததாரர் | 18.01% குறைவு |

**அலுவலக குறிப்பு**

1) 18.47% குறைவாக திரு.அபுதாஹிர் கேட்டிருத்த போதிலும் இவருடைய ஒப்பந்தப்பதிவு நடுவர்மன்ற நீதிமன்ற அறிவுரைப்படி அது தவறு என்று சுட்டிகாட்டி இன்றும் அவருடைய புதுப்பித்தல் முடிவு செய்யப்படாத நிலையில் நிலுவையில் இருந்து வருகின்றது. எனவே ஒப்பந்ததாரராகவோ அல்லது ஒப்பந்ததாரர் அல்லாதவராகவோ முடிவு செய்யாத நிலையில் இவருடைய ஒப்பந்தப்புள்ளி ஏற்க இயலாது என்று சொல்வதற்கு இடமில்லை. அடுத்த நிலையில் உள்ள திரு.ராமானுஜம் 18.01% மதிப்பீட்டினை குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளமையால் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

2) திரு.அபுதாஹிர் ஒப்பந்தப்புள்ளி புதுப்பித்தல் தற்போதுதான் ரத்து செய்யப்பட்டுள்ளதால், தனக்கு புதிதாக புதுப்பிக்க கால அவகாசம் கொடுக்கவில்லை என்று நீதிமன்றம் அணுகுவதற்க்கும் பணியினை முடக்குவதற்க்கும் வாய்ப்பு உள்ள நிலையில் இதனை ரத்து செய்து புதிதாக டெண்டர் விடலாம் என்பதன் மீது வழங்கறிஞர் குறிப்பு தேவைப்படுகிறது. அதுவரை நிறுத்தி வைக்கலாம்.

மன்றம் 1 மற்றும் 2–ன் மீது முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 69 /2023, நாள்.03.02.2023 / பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு திரு.இராமானுஜம் 18.01% குறைவாக அளித்துள்ளமையால் அவருக்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 2022–2023 ஆம் ஆண்டிற்க்கான கீழ்கண்ட பணி தேர்வு செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் |
|---|---|
| *1)* | *ஏலமன்னா செட்டிமார் காலனி சாலை பேவர் பிளாக் அமைத்தல் (வார்டு எண்.2)* |

***அலுவலக குறிப்பு***

*பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.*

**தீர்மானம் எண். 70 /2023, நாள்.03.02.2023 / மன்றம் அனுமதி வழங்குகிறது.**

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்களை இயக்க இரண்டு ஓட்டுநர்கள் வெளிக்கொணர்வின் அடிப்படையில் திரு. பிஜூ மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி, ஓட்டுநர்களை பணிக்கு அனுப்பும் காலம் 30.11.2022–ல் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மறு உத்தரவு வருவரை மேற்படி, ஓட்டுநர்களை பணிக்கு அனுப்பும் காலத்தை பொதுசுகாதார பணியின் அத்தியா அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், வாகனத்தை இயக்குதல் காரணமாகவும், டிசம்பர் 2022 , ஜனவரி 2023 மற்றும் பிப்ரவரி 2023 ஆகிய மூன்று மாதத்திற்கு நீட்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 71 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது**

**பொருள் எண்.13**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பணிகளுக்கு 10 நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கான பணியிடம் ஒதுக்கீடு செய்ததில் 2 பணியிடம் 8 தூய்மை பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலையால் நகராட்சி உள்ளதை கருத்தில் கொண்டு, ஏற்கனவே வெளிக்கொணர்வின் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை பணிக்கு அனுப்பும் M/S Atchaya Associates Gudalur-ன் பணிக்காலத்தை பணிக்கால நீட்டிப்பு 30.11.2022 இல் முடிவடைவதால் டிசம்பர் 2022, ஜனவரி 2023 மற்றும் பிப்ரவரி 2023 ஆகிய மூன்று மாதத்திற்கு நீட்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 72 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது.**

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறை, ஆணையாளர் அறை, பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவு தளவாட பொருட்களின் இருப்பு அறை ஆகியவற்றில் பழுது மற்றும் மறுசீரமைப்பு பணிகள் செய்தமைக்கான உத்தேச செலவினத் தொகை ரூ.85,000/—அனுமதி வழங்க நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 73 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது.**

**பொருள் எண்.15**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சாலையோரங்களில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் உள்ள கால்நடைகளை இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள ஆகும் செலவினங்களை அந்தந்த கால்நடையின் உரிமையாளர்களிடம் தண்டத்தொகையில் ஈடுகட்டலாம். உரிய தண்டத்தொகை செலுத்தி மூன்று தினங்களுக்குள் உரிமையாளர்கள் வந்து தங்களது கால்நடைகளை அழைத்துச் செல்ல வேண்டும், தவறும் பட்சத்தில் நகராட்சி சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் விடப்படும் என்பதையும் பொதுமக்களுக்கு தெரிவிக்கலாம். முதற்கட்டமாக பராமரிப்பு கொட்டகை அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.100000/—ஐ நகராட்சி பொதுநிதியில் செலவு செய்யலாம். நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 74 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது.**

**பொருள் எண்.16**

நெல்லியாளம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான பகுதி சபா கூட்டம் வார்டு வாரியாக நடைபெறுவதற்கு பொதுமக்கள் மழைக்காலங்களில் திறந்த வெளியில் கீழே அமர்ந்திருப்பது அசௌகரியமாக இருப்பதால் சாமியானா, நாற்காளி, தேநீர் குவளைகள் மற்றும் தேநீர்கேன் , மைக்செட் அமைத்தல் மேலும் உரக்கிடங்கில் எடை போடுவதற்கு எடை இயந்திரம், அலுவலக உபயோகத்திற்கு வாட்டர் பில்டர் மற்றும் அலுவலக அறைகளுக்கு தடுப்பு அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் செலவீனத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2,95,000/—திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 75 /2023, நாள்.03.02.2023 / மன்றம் ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்

**(திருமதி. சி.சிவகாமி.)**

நகர்மன்ற தலைவர்,

நெல்லியாளம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையாளர்,

நெல்லியாளம் நகராட்சி.